



மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) நாமக்கல்.

பரமத்தி ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், மணியனூர் ஊராட்சி /கிராமம், ச.எண்.375/2 –ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

கோப்பு எண் : NKL / LK1X7ZUZ / 5342 / 2022 அளவு : **1:400** (அ) **1:33'0"**

**இணைய வழி விண்ணப்பம் எண்:** LK1X7ZUZ

குறிப்பு :

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | 2.20 ஏக்கர் (அ) 8900.00 ச.மீ |
| மனைப்பிரிவு எல்லை | |
| நிலையில் உள்ள சாலை | |
| மனைப்பிரிவு சாலை | |
| கோரிய மனைகள் | 20 |
| ஒதுக்கிய மனைகள் | 20 |

ஒதுக்கப்படவேண்டிய 10% பூங்காவிற்கான பரப்பு : மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு – சாலைகளின் பரப்பு $X \frac{10}{100}$ (8900.00 - 2574.15) $X \frac{10}{100}$ = 632.59 ச.மீ (10.00%)

அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கள் துறை நாள் 04.02.2019 –ன் படி அரசு வழிகாட்டி மதிப்பின்படி OSR பரப்பிற்கு தொகை செலுத்தப்பட வேண்டும்.

ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு மனைகளின் பரப்பு : 45.60 ச.மீ (0.72 %)

ஒதுக்கப்பட வேண்டிய மின்பகிர்மானம் மனைகளின் பரப்பு : 45.60 ச.மீ (0.72 %)

பொது ஒதுக்கீடுகள்

மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டவை

1) உத்தேச மனைப்பிரிவு சாலையின் பரப்பளவு : 2574.15 ச.மீ
2) பொது உபயோகம் பரப்பளவு : 45.60 ச.மீ (0.72 %)
} தானபத்திரம் எண்–5823/2022 நாள்–28/12/2022

3) மின்பகிர்மானம் (TANGEDCO) பரப்பளவு : 45.60 ச.மீ (0.72 %) – தானபத்திரம் எண்–5824/2022 நாள்–28/12/2022

**மூலை முடக்கு : 12மீ அகல சாலை வரை 1.50mX1.50m**

உத்தேச மனைப்பிரிவு சாலையின் விவரம்

1. **10.00 மீ சாலை** 1-1 = 1923.00 **ச.மீ**
2. **9.00 மீ சாலை** 2-2 = 164.70 **ச.மீ**
3. **9.0 மீ சாலை** 3-3 = 155.70 **ச.மீ**
4. **9.0 மீ சாலை** 4-4 = 164.70 **ச.மீ**
5. **9.0 மீ சாலை** 5-5 = 154.80 **ச.மீ**
6. 1.5x1.5 **மூலை முடக்கு** 10 **எண்ணம்** = 11.25 **ச.மீ**

**மொத்த பரப்பளவு** = 2574.15 **ச.மீ**

**நிபந்தனைகள் :**

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.

2. அரசாணை எண்.134 ஊரக வளர்ச்சி துறை நாள் 20.09.2002 –ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது எனச் சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

3. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கள் துறை நாள் 04.02.2019 –ன் படி அரசு வழிகாட்டி மதிப்பின்படி OSR பரப்பிற்கு தொகை செலுத்தப்பட வேண்டும்.

4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டாலே அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குனர்/ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6. நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி/ திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையபத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதார் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே பார்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபறும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'X4' அளவிலான நிரந்து தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

8. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லத்தக்கதல்ல.

9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

10. உத்தேச மனைப்பிரிவின் ஊடே POWER LINE, HT LINE, LT LINE, AND TELEPHONE LINE ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு மாற்றிய பின்னரே முறைப்படுத்தப்படல் வேண்டும்.

11. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.

12. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

**APPROVAL No. : SWP / DTCP / NAMAKKAL/ LAYOUT No. : 07/ 2023**

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்

*Signature Not Verified*
*Signed by: Assistant Director*
*Location:Namakkal*
*Date:2023.01.1[illegible]9:26:54*